# நோயாளி தகவல் கையேடு

## [GLIMEPIRIDE]

### இந்த மருந்து எதற்கானது?

Glimepiride நீரிழிவு நோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆரோக்கியமான உணவு, வழக்கமான உடற்பயிற்சி போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களுடன் சேர்ந்து, இரத்தச் சர்க்கரை அளவைக் குறைப்பதற்கு இது துணை புரிகிறது. கணையம் அதிக இன்சுலின் வெளியாக்குவதற்கு இந்த மருந்து உதவுகிறது. இதன்வழி, உங்கள் இரத்தச் சர்க்கரை அளவு குறையும்.

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்ளவேண்டும் / பயன்படுத்தவேண்டும்?

உங்கள் மருத்துவர் அறிவுறுத்தியபடி, சாப்பிடுவதற்குச் சற்றுமுன் மாத்திரையை (மாத்திரைகளை) உட்கொள்ளுங்கள்.

மருந்தை உட்கொண்டவுடன், சாப்பிடாமல் இருக்கவோ சாப்பிடுவதைத் தாமதப்படுத்தவோ கூடாது.

### இந்த மருந்தை நான் உட்கொள்ள / பயன்படுத்த மறந்துவிட்டால் என்ன செய்வது?

நீங்கள் ஒரு வேளைக்கான மருந்தை உட்கொள்ள மறந்துவிட்டால், அடுத்த சாப்பாட்டுக்குமுன் அடுத்த வேளைக்கான மருந்தை உட்கொள்ளுங்கள். தவறவிட்ட மருந்தை உட்கொள்ளவேண்டாம்.

தவறவிட்ட மருந்துக்காக இருமடங்கு அல்லது கூடுதல் மருந்து உட்கொள்ளவேண்டாம்.

### நான் என்னென்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் தெரியப்படுத்துங்கள்:

- இந்த மருந்துக்கு அல்லது இந்த மருந்திலுள்ள மற்ற உட்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்கிறது
- சிவப்பு இரத்த அணுக்கள் உற்பத்தியாகும் வேகத்தைவிட விரைவாக அழியும் குளுக்கோஸ்-6 ஃபாஸ்பேட் டிஹாய்ட்ரோஜினேஸ் (G6PD) குறைபாடு இருக்கிறது
- சல்ஃபாமெதக்சசோல் போன்ற சல்ஃபோனமைட் மருந்துகளுக்கு ஒவ்வாமை இருக்கிறது அல்லது “சல்ஃபா” ஒவ்வாமை இருக்கிறது
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள், கருவுறத் திட்டமிடுகிறீர்கள், அல்லது தாய்ப்பால் ஊட்டுகிறீர்கள்
- உங்களுக்கு இதயத்தில், சிறுநீரகத்தில் அல்லது கல்லீரலில் பிரச்சினைகள் உள்ளன
- நீங்கள் அடிக்கடி மதுபானம் குடிக்கிறீர்கள்
- நோயின் காரணமாக வழக்கத்தைவிடக் குறைவாகச் சாப்பிடுகிறீர்கள். இதனால், உங்கள் மருந்தின் அளவு மாற்றப்பட வேண்டியிருக்கலாம்

- வழக்கத்தைவிட அதிக உடற்பயிற்சி செய்கிறீர்கள் அல்லது உங்களது வழக்கமான உணவில் மாற்றங்கள் செய்கிறீர்கள். இதனால், உங்கள் இரத்தச் சர்க்கரை அளவு பாதிக்கப்படலாம்
- நீங்கள் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர். இதனால், இந்த மருந்தால் பக்கவிளைவுகள் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகமாக இருக்கும்

## இந்த மருந்தின் பொதுவான பக்கவிளைவுகள் என்ன?

எல்லா மருந்துகளையும் போலவே, இந்த மருந்தும் சில உத்தேசப் பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். ஆனால், எல்லோருக்கும் பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. பக்கவிளைவுகளில் ஏதாவது கடுமையாகி தொல்லை கொடுத்தால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.

Glimepiride மருந்தின் பொதுவான பக்கவிளைவுகளில் உள்ளடங்குவன:

- இரத்தச் சர்க்கரை குறைவு (ஹைபோகிளய்சீமியா)
  - உங்களுக்கு இரத்தச் சர்க்கரை குறைவு ஏற்பட்டால், அதன் அறிகுறிகளைச் சமாளிக்க பின்வரும் குறிப்புகளைப் படியுங்கள்
- எடை அதிகரிப்பு
  - இந்த மருந்தினால் எடை அதிகரிப்பதைத் தடுக்க, வழக்கமான உடற்பயிற்சி செய்யுங்கள்

இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகளில் உள்ளடங்குவன:

- பலவீனம்
- தலைசுற்றல்
- பசி
- வியர்த்தல்
- நடுநடுங்குதல்
- மங்கலான பார்வை
- நடையில் தடுமாற்றம்
- வேகமான இதயத்துடிப்பு

இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகளில் ஏதேனும் ஏற்பட்டால், உடனடியாகப் பின்வருமாறு செய்யுங்கள்:

செயல் 1: வீட்டில் இரத்தச் சர்க்கரை மீட்டர் (குளுக்கோமீட்டர்) இருந்தால், உங்கள் இரத்தச் சர்க்கரை அளவைப் பரிசோதித்துப் பாருங்கள். இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவுக்கும் குறைவாக இருந்தால், வேகமாகச் செயல்படும் சர்க்கரை 15 கிராம் உட்கொள்ளுங்கள். வேகமாகச் செயல்படும் சர்க்கரையின் சில எடுத்துக்காட்டுகள்:

- 3 குளுக்கோஸ் மாத்திரைகள் அல்லது
- பாதி குவளை பழச்சாறு (200 மில்லிலீட்டர்) அல்லது
- பாதி டின் மென்பானம் அல்லது இனிப்பான பானம் (175 மில்லிலீட்டர்) அல்லது
- 1 கேன் குறைவான சர்க்கரை குளிர்பானம் (330 மில்லிலிட்டர்கள்) அல்லது
- 3 தேக்கரண்டி சர்க்கரை, தேன் அல்லது சீனிப்பாகு

செயல் 2: உங்களை 15 நிமிடம் கண்காணித்திடுங்கள். உங்களிடம் குளுக்கோமீட்டர் (இரத்தச் சர்க்கரை மீட்டர்) இருந்தால், 15 நிமிடத்திற்குப் பிறகு இரத்தச் சர்க்கரை அளவை மறுபடியும் பரிசோதித்துப் பாருங்கள்.

செயல் 3: உங்கள் இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவுக்கும் குறைவாகவே இருந்தால், அல்லது இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகள் நீடித்தால், நீங்கள் செயல் 1ல் உள்ளபடி மேலும் 15 கிராம் சர்க்கரை உட்கொள்ளவேண்டும்.

இதற்குப் பிறகும் அறிகுறிகள் நீங்காவிட்டால், உடனடியாக மருத்துவரிடம் அல்லது மருத்துவமனைக்குச் செல்லுங்கள்.

செயல் 4: வேகமாகச் செயல்படும் சர்க்கரையை முன்னதாக உட்கொண்ட பிறகு, இரத்தச் சர்க்கரை 4 mmol/L அளவில் அல்லது அதற்குமேல் இருந்தால், சாப்பாட்டை அல்லது தின்பண்டத்தைச் சாப்பிடுங்கள்.

## நான் உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடவேண்டிய அரிய, ஆனால் கடுமையான பக்கவிளைவுகள் என்ன?

மருந்து ஒவ்வாமையின் அறிகுறிகளில் பின்வருபவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உள்ளடங்கும்:

- முகத்தில் / கண்களில் / உதடுகளில் / நாக்கில் வீக்கம்
- மூச்சுத்திணறல்
- உடலெங்கும் தோல் அரிப்பு

இந்த அறிகுறிகள் ஏதேனும் உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக மருந்தை நிறுத்திவிட்டு, உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்.

உங்களது இரத்தச் சர்க்கரை அளவு எப்போதும் குறைவாகவே இருந்தால் (4 mmol/L அளவுக்கும் குறைவு) அல்லது கொஞ்சம் சர்க்கரை சாப்பிட்ட பிறகும் இரத்தச் சர்க்கரை குறைவின் அறிகுறிகள் நீடித்தால் (இரத்தச் சர்க்கரை குறைவைக் கையாளும் முறையை மேலே காணலாம்), உடனடியாக மருத்துவரைப் பாருங்கள் அல்லது மருத்துவமனைக்குச் செல்லுங்கள்.

## இந்த மருந்தை நான் உட்கொள்ளும்போது / பயன்படுத்தும்போது எந்தெந்த உணவை அல்லது மருந்தைத் தவிர்க்கவேண்டும்?

இந்த மருந்தை எடுத்துக்கொள்ளும் வேளையில் மது அருந்துவதைத் தவிர்த்திடுங்கள். ஏனென்றால், முகம் சிவத்தல், குமட்டல், வாந்தி, தலைவலி, வேகமான இதயத்துடிப்பு, வேகமான மூச்சு, தலைசுற்றல் போன்ற அறிகுறிகள் நேரலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்?

சூரிய ஒளி நேரடியாகப் படாத, குளுமையான, ஈரமில்லாத இடத்தில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். இந்த மருந்து பிள்ளைகளின் கைக்கு எட்டாமல் இருக்கவேண்டும்.

## இந்த மருந்தைப் பாதுகாப்பான முறையில் வீசுவது எப்படி?

இந்த மருந்தை ஒரு கறுப்பு நிறக் குப்பைப் பையில் போட்டு, இறுக்கமாகக் கட்டிய பிறகு, குப்பைத்தொட்டியில் வீசவேண்டும்.

## பொறுப்புத்துறப்பு

*மேற்குறிப்பிடப்பட்ட பக்கவிளைவுகள் முழுமையாக ஏற்படக்கூடியவை அல்ல என்பதை கருத்தில் கொள்ளவும்.இம்மருந்தை எடுத்துக் கொள்வதால் தங்களுக்கு ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டது எனக் கருதினால் தங்களது மருத்துவர் அல்லது மருந்தகரிடம் கலந்து ஆலோசிக்கவும்.*

*பரிந்துரைக்கப்படும் அளவைவிட அதிக மருந்தை நீங்கள் உட்கொண்டால், உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடுங்கள். இந்தப் பக்கத்தில் உள்ள தகவல்கள், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடமிருந்து கிடைக்கும் தகவலுக்கு மாற்றாகாது. தயவுசெய்து, மேல்விவரம் அறிய உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.*

*இந்தக் கட்டுரை தேசிய மருந்து தகவல் பணிக்குழு உறுப்பினர்களால் சுகாதார அமைச்சின் ஆதரவோடு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழுவில் குழுமப் பங்காளிகள் (தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுமம், தேசியப் பல்கலைக்கழகச் சுகாதாரக் குழுமம், சிங்ஹெல்த்), சமூக மருந்துக்கடைகள் (கார்டியன், யூனிட்டி, வாட்சன்ஸ்), சிங்கப்பூர் மருந்தியல் சங்கம் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த உள்ளடக்கம், மருந்துக்கடைகளிலும் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் மருந்து கிடைக்குமா என்ற விநியோகத் தகவலைப் பிரதிபலிக்கவில்லை. இத்தகைய தகவலுக்கு, அந்தந்த நிலையங்களிடம் நீங்கள் கேட்டறியலாம்.*